சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP No. 51/2020**

**நாள்.17.08.2023**

**ம.சா.1 செல்லப்பன்**

3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

1)விபத்து சமயத்தில் நான் கம்பெனிக்கு செல்வதற்காக பேருந்திற்கு காத்துக்கொண்டிருந்தேன். என்னுடைய மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் மற்றும் வரைபடத்தை தயார் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்தேன். விபத்தானது தார் ரோட்டில் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் குழி இருந்ததாக மேற்படி பார்வை மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் தவறு. மேற்படி 1-ம் எதிர்மனுதாரர் அவருடைய வாகனத்தை வேகமாக ஏற்றியதால், குழியில் இறங்கி வாகனத்தின் ரிம் கழண்டு வந்து என் மீது மோதியது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே, பாலிசி விதி மீறல் அடிப்படையில், 3-ம் எதிர்மனுதார் எந்த இழப்பீடும் தர கட்டுப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

2) நான் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு தொடர் சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு நான் பூரண குணமடைந்துவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து நேரத்தில் நான் எஸ்.பி.அப்பேரல்ஸில் டெய்லராக வேலை செய்து மாதம் 15,000/- சம்பாதித்தற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு நிரந்த வேலை அல்லது வருமானம் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டவை மற்றும் போக்குவரத்து செலவிற்காக ரூ.7,500/- என்று குறிப்பிட்டுள்ளது மருத்துவ செலவில் வராது என்றால் சரியல்ல. மனு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Subordinate Judge,
Avinashi.